# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 21 வியாழக்கிழமை (05-03-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்: 84


# வவுனியாவில் ரயர் போட்டு எரிந்த நிலையில் சடலங்கள்

## மக்கள் மத்தியில் பீதி

வவுனியா, மார்ச் 5

வவுனியாவில் இருந்து நெலுக்குளம் ஊடாகச் செட்டிக்குளத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள இராசேந்திரம் குளம் என்னும் கிராமப் பகுதியில் அரைகுறையாக எரிந்த நிலையில் இரண்டு சடலங்கள் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டன.

இச்சடலங்களை இனந் தெரியாதவர்கள் டயர்களைப் போட்டு எரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் உயிரிழந்தவர்கள் யார் என்பது குறித்து இன்னும் இனங்காணப்படவில்லை.

இறந்தவர்களில் ஒருவர் பெண் என்றும், மற்றவர் ஆண் என்றும் பொலீஸார் நம்புகிறார்கள்.

இராசேந்திரம் குளத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப பிரேமா யுகம் திரும்புது போல...!

## இலங்கை மீனவர்கள் 15பேர் கைது!

சென்னை, மார்ச் 5

இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 15 பேரை இந்திய கடலோரக் காவல் படையினர் நேற்றுக் கைது செய்து மண்டபம் சுங்கத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் மூவர் புலிகளால் நேற்றுவிடுவிப்பு

வவுனியா, மார்ச் 5

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவரின் பணிப்பின் பேரில் மனிதாபிமான அடிப்படையில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த மூன்று ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

நேற்றுக் காலை 9 மணியளவில் ஒப்படைக்கப்பட்ட மூன்று ஈ. பி. டி. பி. உறுப்பினர்களையும் அவரவர் உறவினர்களிடம் சேர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொண்டுள்ளது.

ரவீந்திரன் முரளீதரன் (20 வயது — பாண்டிருப்பு), அ. தங்கேஸ்வரன் (22 வயது — கண்டி), உடையார் சிவம் (21 வயது — இந்தியா) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# உதிரிக் கட்சிகளின் ஆதரவைப் பெற பாரதீய ஜனதா-காங்கிரஸ் முயற்சி

புதுடில்லி, மார்ச் 5

இந்தியத் தேர்தலில் எந்த அணியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் பாரதீய ஜனதாவும், காங்கிரஸ் அணியும் ஆட்சி அமைக்க தேவையான பலத்தை பெறுவதற்கு உதிரிக்கட்சிகளின் ஆதரவை நாடிப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றன.

கடைசியாக அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி பாரதீய ஜனதா 254 இடங்களையும், காங்கிரஸ் 167 இடங்களையும், ஐக்கிய முன்னணி 93 இடங்களையும், உதிரிக்கட்சிகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 3 படையினர் பலி!

கொழும்பு, மார்ச் 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை 8.00 மணியளவில் நெல் அறுவடை மேற்கொண்டிருந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய படையினருக்கும், புலிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். மற்றும் ஒருவர் காணாமற் போய்விட்டார்.

(இ-8)

## ரெலோ உறுப்பினர் பலி புளொட் உறுப்பினர் காயம்

### கொம்மாதுறையில் தாக்குதல்

மட்டக்களப்பு, மார்ச் 5

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, கொம்மாதுறையில் நேற்று நண்பகல் ரி. விஜயகுமார் (வயது-24) என்ற ரெலோ உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வாகன சோதனையில் அவர் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது புலிகளால் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின்போது இரு புளொட் உறுப்பினர்கள் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

(இ-21)

## கிளைமோர் கண்ணி மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 5

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி கோரகலி மடுவில் நேற்று நண்பகல் 20 கிலோ எடையுடைய கிளைமோர் கண்ணி ஒன்று படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு — பொலன்னறுவை இராணுவ வாகனத் தொடர் அணி மீது தாக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்துக்கான போர் தாமதமடையலாம்

கொழும்பு, மார்ச் 5

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மாங்குளம் நகரை ஒரேயடியாகக் கைப்பற்ற மாட்டார்கள். படிப்படியாகவே நகரைக் கைப்பற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இராணுவ உயர்மட்ட அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று இதனைத் தெரிவித்தது.

மாங்குளம் நகருக்குள் படையினரை நுழையவிட்டு பின்னர் அந்நகரைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருப்பதாகத்தகவல்கள் கிடைத்துள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் சிமெந்து ஆலை மதிப்பீட்டு அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, மார்ச் 5

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சிமெந்து நிறுவனம் ஆகியவற்றின் தொழிற்சாலைகளை மீள இயக்குவது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 2 உறுப்பினர் நேற்று ராஜினாமா!

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாநகர சபைக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் தெரிவான உறுப்பினர்களில் மேலும் இருவர் தமது பதவியை நேற்று ராஜினாமாச் செய்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ்.மாநகர சபைக்குத் தெரிவான ஒன்பது உறுப்பினர்களில் மூவர் ஏற்கனவே ராஜினாமாச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒலுமடுவில் ஜீப்மீது தாக்குதல் கட்டளை அதிகாரி படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

மாங்குளத்துக்குக் கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ ஜீப் ஒன்று சிக்கிச் சிதறியது.

நேற்று நண்பகல் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்தனர்; 4 படையினர் படுகாயம் அடைந்தனர்.

563 ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் ஜெகத் ஜெயசூரியாவும் காயமடைந்த படையினரில் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக் கண்ணிவெடித் தாக்குதலின் போது பின்னால் வந்த ஜீப் ஒன்றும் சேதமடைந்தது என்று 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

(இ-21-8-3)

## டாங்கி முற்றாக அழிப்பு

வவுனியா, மார்ச் 5

ஒலுமடுவில் விடுதலைப் புலிகளின் ஷெல் தாக்குதலில் நேற்று முன்தினம் மாலை யுத்த டாங்கி ஒன்று முற்றாக அழிந்துள்ளது என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

பின்னர் இந்த டாங்கியை டோசர் மூலம் படையினர் மீட்க முயற்சித்த வேளை, விடுதலைப் புலிகள் மீண்டும் நடத்திய ஷெல் தாக்குதலில் அந்த டாங்கி முற்றாக அழிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் டோசர் பின்வாங்கிச் சென்றுவிட்டது.

(இ-3)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டுகின்றோம்

யா / சங்கானை ஸ்தான
அ.மி. த. க. பாடசாலையில்
1997 ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தவர்களான

1. அருள்லிங்கம் அகல்யா — 104 புள்ளி
2. மகேஸ்வரன் கஜந்தன் — 99 புள்ளி

ஆகிய இருமாணவர்களையும் பாராட்டுவதுடன் கற்பித்த ஆசிரியர்களையும் நெறிப்படுத்திய அதிபரையும் நாம் மனமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— பெற்றோர்கள்

( சி/3039 )

உ

## அறிவித்தல்

### இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம்

தென்மராட்சிக் கிளை

பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்

அன்புடையீர்!

மேற்படி கூட்டம் கடந்த சனிக்கிழமை(28-02-98) அங்கத்தவர்கள் வரவின்மையால் எதிர் வரும் சனிக்கிழமை 07-03-98 பி. ப. 2 மணிக்கு (பழைய நேரம்) நுணாவில் மத்தி ஞானவைரவர் கோயில் மண்டபத்தில் தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். அந்தணப் பெரியோர்கள் யாவரும் தவறாது சமுகம் தரும்படி வேண்டுகிறோம்.

நன்றி.

சிவஸ்ரீ
ச. மகேஸ்வரக் குருக்கள்
தலைவர்.

பிரம்மஸ்ரீ
கா. சந்திரசேகர சர்மா
செயலாளர்.

(53844)

## கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை
செபஸ்தியான் குருஸ் அடிகளாரின்
(திருவுளச் சபை)
அன்புத் தாயார்

### திருமதி லூர்த்தம்மா லாசரண் குருஸ்

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அருட்தந்தை அவர்களுக்கும் அவரது சகோதரருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முருகையா குடும்பத்தினர்.
இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ்
முகமாலை.

(சி/3041)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### நவரட்ணம் சுப்பிரமணியம்

உள்ளம் என்னும் ஏட்டில் உறுதி என்னும் கோலால் எங்கள் நெஞ்சகத்தில் உங்களைச் சித்திரமாக வரைந்துவிட்ட தலைவா! ஊதுவர்த்தி நறுமணம் வீசி தன் கடமை முடிந்ததென்று தன்னை அழித்த மாதிரி மறைந்து விட்டீர்கள். தாமரை இலைமேல் நீர்த்துளிமாதிரி இவ்வுலகில் வாழ்ந்து கண்ணீர்ப்பூக்களைக் காலமெல்லாம் போட்டு காலன் கட்டளையுடன் உங்கள் காலடியில் சேரும்.

அன்பு மனைவி சு. கனகமணி
பிரியமுள்ள பிள்ளைகள்: யா. சிபானா,
யா. சாளினி
அன்புள்ள மைத்துனர் ச. செல்வநாயகம்,
பிரியமுள்ள மைத்துனி யா. குலமணி,
மற்றும் உற்ற நண்பர்கள், உறவினர்கள்.

K. K. S. வீதி,
சுன்னாகம் தெற்கு,

(53832)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

கனன்
போட்டோ ஸ்ரட்

### மிசின் திருத்துநர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற கனன் போட்டோ ஸ்ரட் மிசின்களைத் திருத்துவதற்கும், காலத்திற்கு காலம் பேணுவதற்கும் திருத்துநர் தேவை. தகுதியானோர் அத்தாட்சிகளுடன் கூடிய விண்ணப்பங்களுடன் நேரில் சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
1998-03-04

(சி/3037)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

சாரதிகள்
(ஒப்பந்த அடிப்படை)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சாரதிகள் தேவைப்படுகின்றனர். விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழகத் தாபனக் கிளையில் ரூபா. 20.00 செலுத்திப் பெற்று 1998 - 03 - 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

தகைமைகள்:-

சாரதி தரம்: இரண்டு (ii)

(1) 7 ஆம் வகுப்பில் சித்தி,
(2) கார்கள், வான்கள், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் செலுத்துவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருக்க வேண்டும்.
(3) வாகனம் செலுத்துவதில் குறைந்தபட்சம் 3 ஆண்டு அனுபவம்.
(4) வாகனம் ஓடும் போது ஏற்படும் பிழைகளைத் திருத்தும் ஆற்றல்.
(5) ஆகக்குறைந்த உயரம் 5' 2 ½''
(6) பெருந்தெருச் சட்டக்கோவை பற்றி நல்ல அறிவுடையவராக இருத்தல்.
(7) பகலிலும் இரவிலும் வாகனத்தைச் செலுத்தக் கூடிய உடற் பொருத்தம் உடையவராகவும் நல்ல கண்பார்வை உடையவராகவும் இருத்தல்வேண்டும்.
(8) வயது 50 இற்குள் இருத்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்.
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1998 - 03 - 03

(சி/3036)

## மல்லாகம் நீதிமன்ற கட்டடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

இராணுவ நடவடிக்கையினால் முற்றாக சேதமடைந்துள்ள மல்லாகம் மாவட்ட நீதிமன்ற கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த நீதிமன்ற கட்டடத்தின் நிர்மாணப் பணிகளுக்கு 90 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டடத் திணைக்கள அதிகாரிகள் சேதமடைந்துள்ள மல்லாகம் மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தை அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டதன் பின் இக் கட்டடம் முழுமையாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும் — என்று சிபார்சு செய்துள்ளதுடன் இந்தக்கட்டட வேலைகள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையொன்றையும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

## அதிபர் நியமனம்

அண்மையில் ஓய்வுபெற்ற கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் வே. சிவராஜாவின் இடத்துக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய எஸ். குலசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-7)

## முக்கிய அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட "B" பிரிவு கலைப்பீட மாணவர்கள் அனைவரையும் இன்று 05 - 03 - 98 காலை 7.30 மணிக்கு அவசரமாக பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

— மாணவ பிரதிநிதி

(53845)

## மரண அறிவித்தல்கள்

செல்வி

### கெங்காதேவி கார்த்திகேசு

(சம்பந்தர் கிளினிக்)

122/10 ஆனைப்பந்தியை தமது வசிப்பிடமாகக் கொண்ட செல்வி கெங்காதேவி கார்த்திகேசு அவர்கள் 4 - 3 - 98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் ட. கார்த்திகேசு, செல்வராணி தம்பதிகளின் புதல்வியும் விமலாதேவி, கமலாதேவி, சுசிலாதேவி, வாமதேவன், உஷாதேவி, காலஞ்சென்ற பரமதேவன், தேவகி ஆகியோரின் அன்புசகோதரியும், பொ. வெற்றிவேல் (சட்டத்தரணி), காலஞ்சென்ற மூர்த்தி, விமலாதேவி, திருவிளங்கம், சிறீகாந்தன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5 - 3 - 98 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாமதேவன்,
(அண்ணன்).

122/10 ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(53829)

### பண்டிதர் கணபதி சிவலிங்கம்

(பிரசித்த நொத்தாரிஸ் — ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், யா/கரம்பொன் சண்முகநாதன் ம. வி.)

பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகக் கொண்டவரும், 134/276 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கணபதி சிவலிங்கம் 4-3-1998 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி தெய்வானை தம்பதிகளின் இளைய மகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், விஜயகுலராணி (ஆஸ்திரேலியா), நிர்மலாதேவி (ஜேர்மனி), ரோகிணிதேவி, சதானந்தன், திருமகள் (கனடா), இளம்பூரணன், காலஞ்சென்ற இளங்கோவன் மற்றும இளங்கீரன் (ஆசிரியர், யா/வேலணை, சேர், வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.), அதிஸ்டதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திருமதி கண்ணம்மா, திரு. செல்லையா (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வடிவேலன், செல்வச்சீராளன் (ஜேர்மனி), திருமங்களேஸ்வரன், ஜீவா (கனடா) ஆகியோரின் ஆசை மாமனாரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் (முன்னாள் அதிபர், யா/ பருத்தியடைப்பு கதிரேசானந்த வித்தியாலயம்), கோபாலகிருஸ்ணன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) மற்றும் புனிதம்மா (திருமலை) ஆகியோரின் அன்புக்குரிய மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 5-3-1998 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சி. இளங்கீரன்
(மகன்)

யாழ். பிரதம தபாற்கந்தோருக்கு முன்பாக,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(53843)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மகாராஷ்டிராவில் சிவசேனை தோல்வி!

## முதல்வர் ராஜினாமா?

மும்பாய், மார்ச் 5

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரதிய ஜனதா — சிவசேனை கூட்டணி தேர்தலில் தோல்வி கண்டுள்ளது. இதனையடுத்து மாநில முதலமைச்சர் முரளி மனோகர் ஜோசி தமது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். தீவிர இந்து மத அடிப்படை வாதக் கட்சியான சிவசேனையைச் சேர்ந்தவர் இவர்.

முதல்வரின் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அது மாநில ஆளுநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

முரளி மனோகர் ஜோசியின் இராஜினாமா குறித்து சிவசேனைத் தலைவர் பால் தக்கரே உடனடியாக கருத்து எதனையும் வெளியிடவில்லை. இது தொடர்பான அவரது முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஷ்டிராவில் மொத்தமாகவுள்ள 48 இடங்களில் காங்கிரஸும் அதன் கூட்டணிக் கட்சிகளும் 38 இடங்களில் முன்னணியில் இருந்தன. (ஐ)

## தோல்வி குறித்து மூப்பனார் கருத்து



சென்னை, மார்ச் 5

தி. மு. க — த. மா. கா கூட்டணியின் தோல்விக்கு கோவையில் நடந்த குண்டு வெடிப்புகளே முக்கிய காரணமாகும் என்று த. மா. கா தலைவர் கறுப்பையா மூப்பனார் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளின் பின்னர் சென்னையில் நேற்று முன் தினம் முதன்முறையாக செய்தியாளர்களைச் சந்தித்தசமயம் அவர் இதனைத் தெரிவித்தார்.

நிலையான அரசு ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மக்கள் பாரதீய ஜனதாவுக்கு வாக்களித்திருக்கலாம்; அத்துடன் ஐக்கிய முன்னணியின் செயற்பாட்டில் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியும் இதற்குஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## ஜெயலலிதா அறிக்கை

சென்னை, மார்ச் 5

தேர்தலில் அமோக வெற்றியீட்டிய அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் நன்றி தெரிவித்து செல்வி ஜெயலலிதா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

**இந்தியச் செய்திகள்**

மக்களுக்காக உழைப்பதைத் தவிர தமக்கு வேறு இலட்சியம் இல்லை என்றும் —

எஞ்சிய வாழ்நாளை நாட்டு மக்களுக்காக அர்ப்பணிக்க விரும்புவதாகவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## அ.தி.மு.கவினர் வெடி கொளுத்தி ஆரவாரம்


சென்னை, மார்ச் 5

தமிழகத்தில் அ.தி.மு.க. கூட்டணி பெற்ற பெரும் வெற்றியை அதன் தொண்டர்களும் ஆதரவாளர்களும் வெடி கொளுத்தி கொண்டாடினர்.

அ.தி.மு.க. அலுவலகத்தில் ஆரவாரமும். உற்சாக உணர்வலையும் காணப்பட்டன.

தி.மு.க. தலைமையகமான அறிவாலயமும், த.மா.கா. தலைமையகமான சத்தியமூர்த்திபவனும் வெறிச்சோடிக் கிடந்தன. (ஐ)

## லாலு வெற்றி!



பீஹார் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும் ராஷ்டிரிய ஜனதாதள் தலைவருமான லாலுபிரசாத் யாதவ் மத்தியபுராத் தொகுதியில் வெற்றியீட்டினார்.

பீஹாரில் இடம்பெற்ற பல கோடிருபா சம்பந்தப்பட்ட கால்நடைத்தீவன ஊழலில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட லாலு பிரசாத் யாதவ் சிறையில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரது மனைவியான ராப்ரிதேவி பீஹாரில் முதலமைச்சராக உள்ளார்.

## ஜம்மு தேர்தல் முடிவுகள்

புதுடில்லி, மார்ச் 5

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் 5 மக்களவைத் தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை புதிய மக்களவை அமைக்கப்படும் சாத்தியக்கூறு இல்லை என்று தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜம்முவில் உள்ள இந்த 5 தொகுதிகளின் முடிவுகளும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளியாகி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## 105 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 105 தபாற் பொதிகள் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன. தபால்களைத் தரம் பிரித்து விநியோகிக்கும் பணிகள் நேற்றே ஆரம்பமாகின.

யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்படும் தபால்கள் யாவும் நாளை வெள்ளிக்கிழமையே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதால் வெளியிடங்களுக்கு தபால்களை அனுப்ப விரும்புவோர் இன்று வியாழன் பிற்பகல் 3 மணிக்கு முன் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்ப்பிக்குமாறு யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-7)

## நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு

யாழ்ப்பாணம் மார்ச் 5

வவுனியா அரச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பவுஸரில் பொருத்தப்பட்டிருந்த றொபின் ரக நீரிறைக்கும் இய்ந்திரம் ஒன்று அண்மையில் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா கச்சேரியில் 24 மணிநேரமும் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடமும் வவுனியா கச்சேரி நீர்த்தாங்கிக்கென பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் திருடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணம் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## தபாலகத்தில் மணிக்கூடு திருட்டு

பருத்தித்துறை தபால் நிலையம் இரவு நேரம் உடைக்கப்பட்டு அங்கிருந்த சுவர் மணிக்கூடு ஒன்றும் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளன.

கடந்த திங்கள் காலை தபால் நிலைய உத்தியோகத்தர்கள் கடமைக்குச் சென்றபோது தபால் நிலையத்தின் பின் புறக் கதவு உடைக்கப்பட்டு சுவர்மணிக்கூடும், சைக்கிளும் திருடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-173)


## அறிவித்தல்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச்சங்கம் (ஓட்டோ)

போக்குவரத்து,பாதுகாப்புக்கருதிஇல. 20, பஸ்நிலைய முன்பாக தற்பொழுது இயங்குகின்றது. எனவே யாழ். குடாநாட்டில் பிரத்தியேக சேவையில் ஈடுபடும் சகல ஊர்திஉரிமையாளர்களும், சாரதிகளும்சகலஆவணங்களுடனும் எதிர்வரும் 10 – 03 – 98– க்கு முன்பாக பதிவு செய்து சேவையிலீடுபடுத்துமாறு அன்புடன் அறியத் தருகின்றோம்.

நன்றி.

நிர்வாகம்

(53835)


## கண்ணீர்ப் பூக்கள்

26 – 02 – 98 வெள்ளி இறைவனடி சேர்ந்த

இசைஞான அரசு கதிரவேலு நம்பிராசா

அவர்களின் மறைவு வடமராட்சி மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கும் இவ்வேளையில் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களையும் தெரிவித்து வடமராட்சி மக்கள் சார்பில் கண்ணீரிப்பூக்களையும் சமர்ப்பிக்கிறேன்.

சிவப்பிரம்மஸ்ரீ ராம் செங்காதரக்குருக்கள்
சாரதா பீடம்,
யார்க்கரு தேவஸ்தானம்.
அல்லையம்பதி தேவஸ்தானம்.

(53837)


## யோகா போட்டோ

கலர் பாஸ்போட் படங்கள்
10 நாள்களில் எடுத்துக் கொடுக்கப்படும்.

யோகா போட்டோ & வீடியோ
78, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம் (53834)


## 31 -ம் நாள் நினைவஞ்சலி



திருமதி கனகசிங்கம் ரேவதிஅம்மாள்

மலர்வு: **02 – 04 – 1934** உதிர்வு: **03 – 02 – 1998**

திருமதி ரேவதி அம்மாள் கனகசிங்கம் அவர்களின் இறுதிக், கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 05 – 03 – 98 வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசனத்திலும், வழிபாடுகளிலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. கனகசிங்கம்,
ஆலடிலேன்,
குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை. (53837)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - அராலிப் பாதையில் பஸ் சேவை நடத்துக

## அரச அதிபருக்கு மகஜர்

யாழ் — அராலி வீதியில் 784 இலக்க பஸ் சேவையை நடத்தி தமது போக்குவரத்துக்கு உதவுமாறு அராலிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கையெழுத்திட்டு யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

குறிப்பிடப்பட்ட பாதையால் பயணத்தை மேற்கொள்ளும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய அனைவரும் 789 ஆம் இலக்க பஸ்ஸையே பயன்படுத்தி வருகிறார்கள். குறிப்பிட்ட பஸ் மாதகலில் இருந்து புறப்படுவதால் சன நெருக்கடி அதிகமாக உள்ளது. அராலி ஊடாக வரும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டாவது பஸ்ஸில் பயணத்தை மேற் கொண்டால் அலுவலகத்திற்கு நேரம் தாமதித்தே செல்ல வேண்டியுள்ளது. ஆகவே குறிப்பிட்ட பாதையால் ஒரு பஸ் சேவையை நடத்தினால் எமது கடமைகளைச் சீராக மேற்கொள்ள முடியும் என்று அரச அதிபருக்கு சமர்ப்பித்துள்ள அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## அதிபர் நியமனம்

அண்மையில் ஓய்வு பெற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் சி. கேசவராஜனின் இடத்துக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் கு. சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-152)

## காயம்

உடுப்பிட்டி வல்வெட்டித்துறை வீதியில் நேற்று முன்தினம் அதிகாலைஇடம்பெற்ற மோட்டார் சைக்கிள்—சைக்கிள் விபத்தில், ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய உடுப்பிட்டியைச் சேர்ந்த இ. இராஜேஸ்வரன் (வயது 23) என்பவர் கால்களிலும், கைகளிலும் காயங்களுக்கு உள்ளாகி மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டார். (இ-109)

## இந்து மத குருமார் ஒன்றியம்

### வடமராட்சி

வடமராட்சி குருமார்கள், பிராமண இளைஞர்களுக்கு துரிதமாக சமஸ்கிருத வகுப்புகள் ஆரம்பிக இருப்பதால் இதில் பங்குகொள்ளும் அனைவரும் செயலாளர் ராம்-கெங்காதரக்குருக்கள், அல்லையம்பதியில் உங்கள் பெயர் விவரங்களைப் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் புதிதாக அனைவரும் அங்கத்துவம் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வடமராட்சிக்கான பொதுக்கூட்டம்.
பின்னர் அறிவிக்கப்படும்.

சிவஸ்ரீ மனோகரக்குருக்கள்,
தலைவர்
வடமராட்சி ஒன்றியம்

(53826)

## விற்பனைக்கு

புத்தம் புதிய SANYO வீடியோ புறொஜெக்ரர்

1. MODEL 3 L C D 40 D P A (20 அடிக்கு மேல்)
2. MODEL 3 L C D 220 (40 அடிக்கு மேல்)

விற்பனைக்குண்டு.

**திரு வீடியோ விஷன்**
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
(53797)

## ரஷ்யாவில் உயர்கல்வி

சர்வதேச அங்கீகாரமுடைய
பல்கலைக்கழகங்களில்
மருத்துவம், பொறியியல் மற்றும் ஏனைய துறைகளிலும் அனுமதி பெற்றுத்தரப்படும்.

**98/99** விரிவுரைகள் ஓகஸ்ட் **1998** இல் தொடங்கும்.
அனுமதி பெற்றுத் தருவதற்கான கட்டணம் எதுவுமில்லை.

Dr. க. சிவனடியான்
நவாலி தெற்கு, மானிப்பாய்.
(53754)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி 1997/1998

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில்(விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான ''தொழிலாளர் கல்விச் சான்றிதழ்'' நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20-க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ., 10 செ.மீ அளவினதான கடித மேலுறையுடன் உதவிப்பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி: **31 - 03 - 1998**. தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு:

10 வருடங்களுக்கு குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்
(சி-3034)

## பணியாளர் தேவை

**வண்ணைவிஸ்வலிங்க மகாகணபதி கோயில்**
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்)

மேற்படி கோயிலுக்குப் பணியாளர் தேவைப்படுவதால் முன்வேலை அனுபவம், நற்சான்றிதழ் என்பனவற்றுடன் **21 - 03 - 98** சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு ஆலயத்திற்கு வரவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

தர்மகர்த்தா சபை

காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை.
(53817)

## கண்ணீர் அஞ்சலி

செல்வி
**கெங்காதேவி கார்த்திகேசு**

எங்கள் நிலையத்தின் நீண்டகால ஊழியராகக் கடமையாற்றிய செல்வி கெங்காதேவி கார்த்திகேசுவின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சம்பந்தன் வைத்திய நிபுணர்
ஆலோசனை நிலையம்,
574/1, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.
(53822)

## 31 ஆம்நாள் நெஞ்சதிர்ந்த நினைவஞ்சலி



வையகவரவு:
**27 — 08 — 1922**

விண்ணகவிரைவு:
**03 — 02 — 1998**

### அமரர் சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை

பாசமதை நெஞ்சிற் பதித்து வளர்த்தெடுத்தீர்கள்.
நேசம் தந்தீர்கள்; நிறைவாழ்வு காட்டினீர்கள்.
தந்தையாய், ஆசிரியனாய் சகலமுமே ஆனீர்கள்.
நொந்து கதறவிட்டு நிமலனடி சென்றீர்கள்.
கரம்குவித்து சிரந்தாழ்த்திப் படைக்கின்றேன்
அஞ்சலிகள்.

- மகன்.

மருமகளாய்க் கருதவில்லை மகளாக நேசித்தீர்கள்.
ஒருபொழுதும் சினந்தறியா உயரன்பு காட்டினீர்கள்.
அடங்கியதோ உயிர்,அடங்காத துயர்பெற்றேன்
நடம்புரியும் ஈசனடி நாடினீர்கள்
அஞ்சலிகள் தந்து பணிகிறேன்.

- மருமகள்

மடியிருத்தி, கையேந்தி மகிழவைத்த அப்பப்பா!
குடியிருந்த தெய்வமெனக் கும்பிடவே வாழ்ந்தீர்கள்.
கண்கலங்கி நிற்கின்றோம் கையிழந்த துயரானோம்.
விண்ணுறவுதேடினீர்கள்வேதனையால்வாடுகிறோம்.
அரனடியில் அமைதி பெறப் பணிகிறோம்.

- பேரப்பிள்ளைகள்.

உங்கள்ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.


- குடும்பத்தினர்

மத்திய மகாவித்தியாலய வீதி,
நெல்லியடி.
(53789)

நினைவென்றும் மாறாது

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

05-03-98



மானிடனாய்:
**02—05—1912**

தெய்வமாய்:
**03—02—1998**

அமரர்

### சின்னப்பு வல்லிபுரம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

கோயில் குடியிருக்கும் தெய்வமெல்லாம் கும்பிட்டு
வாயில் சிவநாமம் உச்சரித்த வல்லிபுர வன்றொண்டா
நோயில் தளர்வுற்ற போதும் நாள் வழிபாடு தவறாத
தாயில் சிறந்த தயையுடைய தண்ணாளா!
உன்றன் நாமம் மங்காது!
நல்லையில் நிறைந்திருக்கும்.

அன்பின் ஐயா, ஆசையான தெய்வமே!
அருகிருந்து கதை சொல்லி, கண்ணியமாய்
வாழ எமக்கு வழிகாட்டிய குடும்ப விளக்கே!
ஒளி மறைந்து தெய்வமாகி விண் ஏகினையே!

05-03-1998 வியாழனன்று எமது இல்லத்தில்நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்கேட்டுக் கொள்கின்றோம். அமரரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த சகலருக்கும் நன்றிகள் பல.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

32, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(53811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# குறைந்த செலவுடன் வீடுகளை அமைக்கும் திட்டம் குறித்து விளக்கம்

## தென்பகுதி நிபுணர்கள் வழங்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணத்தில்குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கு உதவும் வகையில் குறைந்த செலவில் வீடுகளை அமைக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தெற்கில் பல இடங்களில் குறைந்த செலவில் வீடு அமைக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்திய ''லீட்ஸ்'' (LEADS) என்னும் அமைப்பின் பிரதிநிதிகள் இத்திட்டத்தைநடைமுறைப் படுத்துவது பற்றிய விளக்கங்களை அளிப்பதற்காக கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

அந்த அமைப்பின் பணிப்பாளர் றொனி சென்விரத்தின, திட்ட அதிகாரிகளான மனிக் டிசில்வா, ட்ராவிட் சன்ஜீவ சில்வா ஆகியோரே இங்கு வருகை தந்திருந்தனர்.

ஊரெழுவில் அமைந்துள்ள 511 ஆவது படைப்பிரிவுக் குட்பட்ட 11 ஆவது விஜய பாகு படைப்பிரிவின் தலைமை அலுவலகத்திலும், அச்சுவேலியில் அமைந்துள்ள 9ஆவது காலாற்படைப்பிரிவு அலுவலகத்திலும் பொதுமக்களுக்கு இக் குழுவினர் விளக்கம அளித்தனர்.

511 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஜீ. எம். எம். றொக்வூட் இந்த வைபவங்களை ஏற்பாடு செய்திருந்தார்.

உதவி அரசாங்க அதிபர்கள், கிராமசேவையாளர்கள், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக் குழுவில் இடம் பெற்ற பணிப்பாளர் றொனி சென விரத்தின, குறைந்த செலவில் எவ்வாறு வீடு அமைப்பது என்பது தொடர்பான விளக்கங்களை வீடியோப் படங்கள் மூலம் விளக்கம் அளித்தார்.

இந்த நிறுவனத்தின் யாழ். அதிகாரியான பென் குணரத்தினமும் இந்த நிகழ்வுகளில் பங்கு பற்றினார்.

(ஐ-3-9)

## சாவகச்சேரியில் கண் சிகிச்சைப் பிரிவு

தென்மராட்சி, மார்ச் 5

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் விரைவில் கண் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை நிபுணரினால் இந்த சிகிச்சைப் பிரிவு மாதத்தின் இரண்டாம், நான்காம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும். மாதத்தில் ஒரு தடவை கண் சத்திர சிகிச்சையினை சாவகச்சேரி ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை மண்டபத்தில் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஐ-117)

## டாக்டர்கள் பற்றாக்குறை:

# நோயாளர் நிலைமை மந்திகையில் பாதிப்பு

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இருந்துவரும் டாக்டர்கள் பற்றாக் குறைவினால் பெரும்பாலான நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட வேண்டிய அவல நிலை இருந்து வருகிறது.

சத்திரசிகிச்சை நிபுணர், குழந்தை மகப்பேற்று நிபுணர், மற்றும் வைத்திய அதிகாரிகள் உட்பட 25 வைத்தியர்களுக்கு மேல் கடமையாற்றி வந்த இந்த வைத்தியசாலையில் தற்போது மாவட்ட வைத்திய அதிகாரியுடன் 7 டாக்டர்கள் மாத்திரமே கடமையாற்றுகின்றனர்.

மகப்பேற்று நிபுணர், சத்திரசிகிச்சை நிபுணர்கள் இல்லாத காரணத்தினால் பல அவசர பிரசவ நோயர்ளர்கள்—

சத்திரசிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள்— யாழ். போதனா வைத்தியசாலைக்கே மாற்றப்பட வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

மேலும் இவ் வைத்தியசாலைக்கு 6 மாத கால மாற்றல் அடிப்படையில் கொழும்பில் இருந்து வந்து கடமையாற்றி விட்டுத் திரும்பிச் சென்ற மூன்று டாக் டர்களுக்குப் பதிலாக கொழும்பில் இருந்து மீண்டும் ஒரே ஒரு டாக்டர் மாத்திரமே கடமைக்கு வந்துள்ளார்.

(இ-15)

## கோரிக்கை

கொழும்புத்துறை, மார்ச் 5

இடம் பெயர்வுக்குப் பின் நீண்ட காலமாகச் செயற்படாது இருக்கும் கொழும்புத்துறை இந்து இடுகாடு பரிபாலன சபையை மீண்டும் இயங்க ஆவன செய்யுமாறு இப்பகுதிப் பொது மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (இ—30)

# ஈழத்துச் சிறுகதை ஆழமானதாக அமைய சம்பந்தன் வழிகோலினார்

## வெளியீட்டு விழாவில் பேச்சு

திருநெல்வேலி, மார்ச் 5

இலக்கியத்தின் போக்கு காலத்திற்கு காலம் மாறுபடக்கூடியது. ஆனால் மனித உணர்வுகள், சபலங்கள் என்பன வேறுபடாது என்றும் இருக்கக் கூடியன. 1930 களில் அமரர் சம்பந்தன் எழுதிய சிறு கதைகளின் கதா பாத்திரங்களின் மன உணர்வுகள், சபலங்கள் இன்றும் பொருந்துபவனவாக உள்ளன.

ஈழத்துச் சிறு கதைகளின் உருவமும், உள்ளடக்கமும் அழகாகவும், ஆழமாகவும் அமைவதற்கு சம்பந்தனின் ஆரம்ப கால சிறுகதைகள் வழி கோலின என்றால் மிகையாகாது.

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டம் நடத்திய ''சம்பந்தன் சிறுகதை'' தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முது நிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா குறிப்பிட்டார்.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கல்வயல் வே. குமாரசாமி தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அண்மையில் இவ் வெளியீட்டு விழா நடைபெற்றது.

கலாநிதி சிவலிங்கராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஈழத்து நவீன இலக்கியத்தில் பெருமையுடன் தலை நிமிர்ந்து சிறுகதைத்துறை நிற்பதற்கு அன்று வித்திட்ட சம்பந்தன் போன்ற எழுத்தாளர்களை நினைவு கூர வேண்டியது எமது கடமையாகும்.

இலக்கியத்தின் பண்பு மாறாத வகையில் மரபு ரீதியிலான சிறுகதைகளாக இவரது படைப்புகள் விளங்குகின்றன. இவர் வாழ்ந்த கால கட்டத்தில் தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் இலக்கிய ரீதியிலான தொடர்புகள் மிகவும் நெருக்கமானவையாக இருந்தன. தமிழ் நாட்டு சஞ்சிகைகளான கலைமகளிலும், கிராம ஊழியனிலும் இவரது படைப்புகள் பல வெளிவந்துள்ளன.

அழகும், கலையம்சமுள்ள சில கதைகளே ஒரு எழுத்தாளனை நிலைக்கச் செய்துவிடப் போதுமானவை என்பதற்கிணங்க உணர்ச்சியைக் கிளறி உள்ளதில் பதிந்துவிடக் கூடிய சம்பவங்களை இனியசொற்களால்கோர்த்து கதைகளை புனைந்திருக்கும் சம்பந்தனின்இலக்கியப் பணிகளை எமது இளம் சந்ததியினர் அறிந்துகொள்ள இந்த சிறுகதைத் தொகுதி உதவும் என்று நம்புகின்றேன் என்றார்.

செம்பியன்செல்வன் தமது உரையில் தெரிவித்ததாவது:-

ஈழத்து சிறுகதை துறை வரலாற்றில் ஆரம்பகால சிறுகதை எழுந்தாளர்களான சி. வைத்திலிங்கம், 'இலங்கையர்கோன்' ஆகியவர்களில் இருந்து சம்பந்தனைப் பிரித்துஆராய வேண்டியுள்ளது. மனித உணர்வுகளையும், மன அசைவுகளையும் அறிவியல் துறையில் அணுகி அவற்றின் சிறப்புகளை கலை வடிவமாக்கிய பெருமை சம்பந்தனுக்கே உரியது.

சிறுகதை உலகிலிருந்து விடுபட்டு பிற்காலத்தில் கவிதை உலகில் இவர்காலடி எடுத்து வைத்த போதிலும் இவரின் இலக்கியப் பணிகள் என்றும் சோர்வடையவில்லை. மக்கள் மனதில் நல்லெண்ணத்தை வளர்ப்பதே இலக்கியத்தின் பணி என்பதையிட்டு அசைக்க முடியாத நிலையில் அவர் செயற்பட்டதை அறிந்து கொள்ள முடிகின்றது — என்றார்.

செல்வி மாதவி சுந்தரம் பிள்ளை, சு. வேலுப்பிள்ளை (சு. வே.) ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். நூலின் முதல் பிரதியை சி.வி.கே.— சிவஞானம் பெற்றுக் கொண்டார்— இறுதியில் யாழ். இலக்கிய வட்ட செயலாளர் [illegible] நன்றியுரை நிகழ்த்தினார். (அ-135)

# நான்கு பாலர் பாடசாலைகள் அனலைதீவில் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 5

அனலைதீவில் பாலர் பாடசாலைகள் நான்கும், தையல் பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் க.சௌந்தரராஜன்தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், ஈ. பி. டி. பி அமைப்பைச் சேர்ந்த நிஸாந்தன் நடன சிகாமணி, அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலய அதிபர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

காலை 11 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வின் இறுதியில் மகாவித்தியாலய மாணவிகளின் வயலின் இசைக்கச்சேரியும் இடம் பெற்றது.

அங்கு தீவுப்பகுதி மக்களின் தேவைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் அத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தாம் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரிவித்தார். (ஐ-9)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 — 10 — 1909 | 05 — 03 — 1986 |

**முதலியார் வை. மகேசன் J.P.**

ஆண்டு பன்னிரண்டு ஆனாலும்,
இன்றுவரை ஆறவில்லை எம்துயரம்
ஐயா! நீர் எம் நெஞ்சில் வாழும்வரை.
அது ஆறாது! ஆறவே ஆறாது!

பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

''லிங்கவாசா''
முதலியார் மகேசன் வீதி,
நவாலி.

(53805)

விராட்வே விஸ்வப் பிரமனே நம

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அன்னபூரணம் (பூரணம்) கந்தசாமி**

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 18 - 01 - 1931 | 15 - 02 - 1997 |

திதி: 05 - 03 - 1998

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்''

அன்புத்தெய்வமே, பண்பின் உறைவிடமே, பாசத்தின் பொக்கிஷமே குணத்திலே குன்றா மணியாக வாழ்ந்து எமை வாழ வைத்த அன்புத் தாயே! ஆண்டொன்று சென்றாலும் எங்கள் இதயத்தில் என்றென்றும் உங்களது நினைவுகளே. மீளாத் துயில் கொண்ட பாசக் குல விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, உற்றார், உறவினர்கள்.

தகவல்:- க. கிருஷ்ணசாமி,
லோட்டன் றோட்,
தம்பர் லேன், மானிப்பாய்.

(53777)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

டக்ளஸ் ஜெராட் ஆகிய எனது விசேட அடையாள அட்டை யாழ். நகரில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தில் ஒப்படைத்து உதவவும், [53815]

## விற்பனைக்கு

03 – 03 – 98 அன்று Lucky Farm இல் 1 நாள் குஞ்சு புறோயிலர் எடுத்தவர்கள் உடன் வந்து சந்திக்கவும். மற்றும் 3 நாள் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு (பிறிமா, சிவப்பு, வெள்ளை). தொடர்பு:–Lucky Farm Centre, Palaly Road, Thirunelvely. (53824)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் கதைக்கப்பயில புதிய வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, இல. 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வகுப்பில் பத்து மாணவர்கள் மட்டும் அனுமதி). [53799]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் இருந்து 100 யார் தூரத்தில் நல்ல சுற்றாடல், நல்ல தண்ணீர் வசதியுடன் கூடிய வீடு (பெரியது) வாடகைக்குண்டு. தொடர்பு: மே/பா இல. 710, உதயன் யாழ்ப்பாணம். [53798]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்5

மாகாணக்கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்ளும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் வேலைத்திட்டம் பற்றிய கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 முதல் 4.00 மணிவரை யாழ்ப்பாணம் வலயம் 1 இல் நடைபெறும்.

யாழ்ப்பாணம், நல்லூர்க் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அனைத்துப் பள்ளி முதல்வர்களும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (இ-51)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பல்கலைக்கழக அனுமதி 1997/98

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அல்லது வவுனியா, யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு பல்வேறு கற்கை நெறிகளுக்கு 1997/98 கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டோர், தங்கள் பதிவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலோ அல்லது வவுனியா வளாகத்திலோ 25–3–1998 இற்கு முன் மேற்கொள்ளுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இரு இடங்களிலும் பதிவு செய்ய வசதியற்றோர் ஏற்கனவே விளம்பரப் படுத்தப்பட்டபடி தபால் மூலம் பதிவு செய்யலாம்.

பதிவாளர்

(சி–3033)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## மயில்வாகனம் கமல்ராஜ்

(ராஜு)

(அன்னலக்ஷ்மி நகைத் தொழிலகம்)

அன்னையின் மடியில்: 1969–05–24

அலைகடலின் அணைப்பில்: 1995–03–05

''கானமயில் உன்னைநான்
பிரிந்து தவித்து வாழ்கின்றேன்
காலம் செய்த கோலமோ?
கனவு கலைந்து போனதே...''

இவ்வரிகளையே எந்நேரமும் விரும்பிக் கேட்கும்
உன் வாழ்க்கையிலும் — இது
காலம் செய்த கோலம்தானோ?
அன்பிற்கும் ஆறுதலுக்கும் பிறப்பிடமாய்
அரவணைக்கும் உற்ற நண்பனாய்
ஆயுள் முழுதும் அருகில் இருப்பாய் — என
எண்ணியது கனவாகிப் போனதே — உன்
மணக் கோலத்தைக் காண ஆவலுற்றிருந்த எமக்கு
மரணக் கோலத்தைக் கூட காண்பதற்கு
கொடுப்பினை இல்லாமல் போனதோ — நீ
மறைந்து ஆண்டுகள் மூன்று சென்றனவோ — ஆயினும்
மறையவில்லை உன்மீது கொண்டபாசமல்லோ!


உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:

நண்பன் S. செந்தில்

19/9, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம், (53816)

பாசமான அப்பாவின்

# 3 ஆம் ஆண்டு நினைவாக



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 01 | 09 |
| — | — |
| 11 | 03 |
| — | — |
| 1926 | 1995 |

அமரர்

## தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்

(இளைப்பாறிய கிராமசேவையாளர்)

திதி: 05 - 03 - 98

பொங்கிவரும் கார் மேக வண்ணனே!
இறுதிவரை எம்மவர்க்கும் இனியவனே!
நீர்ந்த போதும் யாவர்க்கும ஒளிவிளக்கே!
நித்தம் நித்தம் உன் நினைவு எம்முடனே.

உங்கள் நினைவுடன்:

மனைவி, மகள், சகோதரி,
பேரப்பிள்ளைகள்.

றோகினி,
கண்டிவீதி,
சாவகச்சேரி. (53795)

# ஒரு வேண்டுகோள்

அண்மைக் காலங்களில் சாயி போதனைகளுக்கு முரணான கீழ்க் குறிப்பிடப்படும் செயல்கள் இரண்டு எமது பகுதிகளில் நடைபெறுவதாக ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களினால் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1. சுவாமியின் நாமத்தைச் சொல்லிப் பண உதவி கோருதல்.
2. சாயியின் அற்புதங்கள் எனச் சில செயல்களை விவரித்து தபால்கள் அனுப்பி அவற்றில் பல பிரதிகளை எடுத்து வெவ்வேறு பேருககு அனுப்பும்படி வேண்டுகோள் விடுத்தல்.

அனைவருக்கும் ஒரு வேண்டுகோள்! மேற்படி செயல்களையும் அதில் ஈடுபடுபவர்களையும் நம்ப வேண்டாம்.

மேற்படி செயல்கள் சுவாமியின் போதனைக்கும், நிறுவனத்தின் குறிக்கோளுக்கும் முரணானவை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி
சேவா நிறுவனங்களின்
இணைப்புக்குழு.

(53802)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி தம்பையா கதிராசி

தோற்றம்: 04 – 03 – 1926

மறைவு: 04 – 02 – 1998

எமது குடும்ப அன்னையின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்கள், நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியோர் அனைவருக்கும் நன்றியுடையோம். 5. 3. 98 இல் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரசாலை மத்தி,
சாவகச்சேரி. (53747)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 11 | 03 |
| — | — |
| 12 | 02 |
| — | — |
| 1926 | 1998 |

அமரர்

## சின்னவன் பொன்னன்

உங்கள் நினைவு என்றும் அழியாது.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி. (53813)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீண்டும் அதே காட்சியா?

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற நிகழ்வுகளை ஒரு மாத காலத்துக்குப் பகிஷ்கரிக்கப் போகிறது. இது குறித்து நேற்றுமுன்தினம் சபையில் அறிவித்துவிட்டு ஐ.தே.க. உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

அரசாங்கம் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. அதனை ஆட்சேபித்தே நாம் நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒரு மாத காலத்துக்குப் பகிஷ்கரிக்க முடிவு செய்தோம் — என்பது ஐ.தே.க. கட்சியினர் கூறும் காரணம்.

ஆனால், உண்மையான காரணம் அதுவல்ல என்று அரச தரப்பினர் சொல்கின்றனர். முன்னாள் அமைச்சரும் இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான விஜேபால மென்டிஸின் குடியுரிமையைப் பறிக்கும் பிரேரணை இந்த மாதம் சபையில் கொண்டு வரப்படவுள்ளது. அதனை எதிர்கொள்ள விரும்பாமல், திராணி அற்றவர்களாகவே ஐ.தே. கட்சியினர் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தனர் என்பது ஆளுங் கட்சியினரின் வாதம்.

உண்மை எது, பொய் எது என்று ஆராய்வதில் இனிப் பயனில்லை. ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கத் தொடங்கி விட்டது.

அரசாங்கம் ஆட்சிக் கட்டிலில் ஏறி மூன்றரை வருடங்கள் ஆகின்றன. அதன் பதவிக் காலத்தில் அரைவாசி கழிந்து விட்டது. என்னதான் அபிவிருத்தித் திட்டங்களை, நலன்புரித் திட்டங்களை மேற்கொண்டாலும், ஓர் அரசாங்கத்தின் பழைய (தேர்தல் காலத்தில் இருந்த) செல்வாக்கும், ஆதரவும் சரியத் தொடங்கும் காலம் இது.

அரசுக்கு எதிரான பிரசாரத்தை தீவிரப்படுத்தவும், தமது நடவடிக்கைகளை சரிப்படுத்தவும், அரசு விடும் தவறுகள் அதன் குறைபாடுகளை முதலாக்கி மக்கள் ஆதரவைத் திரட்டவும் எதிர்க்கட்சிக்கு உகந்த காலம் இது.

அதனால்—

இப்போதிருந்தே அரச எதிர்ப்புப் போக்கை, அணுகுமுறைகளைத் தீவிரப் படுத்தி மக்கள் ஆதரவைப் பெறுவதற்கு ஐ. தே. கட்சி பலமான அத்திவாரம் ஒன்றைப் போடுகிறது என்பதே உண்மை.

அது ஒரு புறமிருக்க—

ஐக்கிய தேசியக் கட்சியின் பகிஷ்கரிப்பு முடிவு, இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை மேலும் வேகம் குறைத்துப் பின்தள்ளும். அது மட்டுமன்றி இது விடயத்தில் எதிர்க்கட்சி அரசுடன் இணக்கம் காணும் சாத்தியத்தை மிகப் பெரிய அளவில் குறைத்துவிடும். இரு தரப்புக்களும் எதிரும் புதிருமாக இயங்கி தீர்வு முயற்சியைக் குழப்பி மேலும் சிக்கலக்கி விடவே இந்த நிலை வழி செய்யும்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் அரசியல் நலன், அரசியல் லாபம் என்பன முதன்மை பெற்று இனப்பிரச்சினை அதற்குள் அமிழ்ந்து போகும் காட்சி மீண்டும் ஒரு முறை அரங்கேறப் போகிறது!

# நாட்டில் சமாதானம் உண்டாக வேண்டுமெனில் விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும்

## ஈழம் கோருவதற்குக் காரணம் உண்டு என்கிறார் அமைச்சர் தொண்டா

அமைச்சர் எஸ் தொண்டமான் ''லங்காதிப'' சிங்கள ஞாயிறு இதழுக்கு (1.3.1998) அளித்த பேட்டியின் தொகுப்பு இது.

ஈழத்தைக் கோரினாலும் அவர்களுக்கு ஈழத்தை வழங்க வேண்டும் என்பதல்ல. அவர்கள் அவ்வாறு கோருவதற்கு காரணம் உள்ளது. 50 ஆண்டு வரலாற்றை அவதானிக்கையில் ஆட்சிக்கு வந்த எல்லா சிங்கள அரசுகளும் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளராகவே கருதின. அவர்களது உரிமைகள் வழங்கப்படவில்லை. இதுவே விடுதலைப்புலிகளை இந்த நிலைமைக்குத் தள்ளியது. இவ்வாறு கிராமியக் கைத்தொழில் அமைச்சர் லங்காதிப பத்திரிகைக்கு வழங்கியபேட்டியில்தெரிவித்தார். அந்தப் பேட்டியின் தொகுப்பை தமிழில் தருகின்றோம்.

கேள்வி:: அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

பதில்:- இதனால் சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன. சமாதானம் அழிந்துவிட்டது. தற்போது நாட்டில் சமாதானமே இல்லை.

கே: விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதற்கு முன்னரும் நாட்டில் அமைதி நிலவவில்லையே.

ப:- அன்று சமாதானம் தோன்றும் போல் இருந்தது, தற்போது அதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

கே:- இதைக் கொண்டு விடுதலைப் புலிகள் சமாதானத்தில் விருப்பம் கொண்டிருந்தார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ப:- அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கத்திற்கு வராவிடின் சமாதானம் ஏற்பட வாய்ப்பில்லை.

கே:- அரசு சமாதானத்திற்கான அழைப்பை விடுத்திருந்தும் அவர்கள் அதற்கு இணங்கவில்லையே.

ப:- அவர்கள் அரசைச் சந்தேகித்தார்கள். எனவே அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கவில்லை.

கே:- அரசு அவர்களுடனான சமாதானப் பேச்சுக்கான வழியை மூடிவிட்டது என்றா கூறுகிறீர்கள்?

ப:- இல்லை. இருதரப்பாரும் அதற்கான பொறுப்பினை ஏற்கவேண்டும்.

கே:- அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஏமாற்றி விட்டதாக நீங்கள் கூறுகிறீர்களா?

ப:- ஏமாற்றிவிட்டதாக நான் கூறவில்லை. ஆனால் பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தைப் போல் இந்த விடயத்திலும் அவர்களுக்கு நம்பிக்கை உருவாகும் நிலைமை இருக்கவில்லை.

கே: விடுதலைப் புலிகள் சமாதான வழியைக் கைவிட்டு யுத்த வழியைத் தேர்ந்தெடுத்ததை சரியானது எனக் கருதுகிறீர்களா?

ப: தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த காலத்தைச் சற்றுக் கவனியுங்கள். தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைக்கும் ஆட்சியில் இருந்த எந்த ஒரு சிங்கள அரசும் தீர்வினைக் காணவில்லை. இக் காரணத்தினாலேயே விடுதலைப் புலிகள் இவ்விதமான நடவடிக்கையில் இறங்கினர்.

கே: விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்யக் கூடாத ஓர் அமைப்பாகக் கருத வேண்டும் எனக் கூறுகிறீர்களா?

ப: இல்லை. நான் அவ்வாறு கூறவில்லை. எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும். இன்று சமாதானமே எமக்குத் தேவைப்படுகிறது. அமைதியை உருவாக்க வேண்டுமாயின் அரசு விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொள்ள வேண்டும். அரசாங்கம் கூறுவதை விடுதலைப்புலிகளும், விடுதலைப் புலிகள் கூறுவதை அரசாங்கமும் ஏற்க வேண்டும் என்று நான் கூறவில்லை, ஆனால் இந்த இரு தரப்பினரும் இணங்கி தீர்வினைக் காண வேண்டும்.

கே: விடுதலைப் புலிகள் தனி ஈழத்தைத் தவிர்ந்த வேறு மாற்றுத்தீர்வு குறித்து சிந்திக்கவில்லை. இல்லையா?

ப: ஈழத்தை வழங்குமாறு கோரினால் கொடுக்க வேண்டும் என்பதல்ல. அவர்கள் இவ்வாறான கோரிக்கையை முன் வைப்பதற்குக் காரணங்கள் உள்ளன. கடந்த 50 ஆண்டு காலத்தில் ஆட்சியில் இருந்த சிங்கள அரசுகள் தமிழ் மக்களை 2 ஆந் தரப் பிரஜைகளாகவே கருதின. தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படவில்லை. எனவே தான் விடுதலைப் புலிகள் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டனர்.

கே:- சமாதானப் பேச்சுப் போன்ற ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இருப்பதாக நினைக்கிறீர்களா?

ப:- அவர்கள் வினோதமான மனிதர்கள் அல்லர். ஏனையோரைப் போலவே அவர்களுக்கும் சமாதானத்தில் விருப்பம் உள்ளது. செல்வநாயகம் அன்று ஜனநாயக வழியிலேயே இந்தக் கோரிக்கையை முன் வைத்தார். அந்தக் கோரிக்கையை பண்டாரநாயகாவும் ஏற்றுக் கொண்டார். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் ஏற்றுக் கொண்டார். இருப்பினும் அவர்களால் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையே!

கே:- ஏதோ ஒரு காரணத்தினாலேயே அவர்கள் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றமுடியாமற்போயிற்று, இல்லையா?

ப:- பெரும்பான்மையினரான சிங்களவர்களின் சொல்லைக் கேட்டு அவர்கள் நடவடிக்கையைக் கைவிட்டனர்.

கே:- பெரும்பான்மையினரின் எண்ணத்திற்கு மதிப்பளிப்பதுதானே ஜனநாயகத்தின் இலட்சணம்.

ப:- அவர்கள் (சிங்களத் தலைவர்கள்) ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பவர்களாக இருப்பின் ஏன் எம்முடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டனர்.

கே:- விடுதலைப் புலிகள் தற்போது அனுசரித்துவரும் செயற்பாடுகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?

ப:- நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் அவர்களுக்கு அதைத் தவிர வேறு மாற்று வழிகள் இல்லாமல் இருக்கலாம்.

கே:- அரசு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்துள்ளது. அதன் மூலம் அரசின் நிலைப்பாடு தெளிவாகிறது. அரசில் அங்கம் வகிக்கும் நீங்களும் அதை ஏற்றுக் கொண்டதாக கருத முடியும் அல்லவா?

ப:- அரசாங்கத்தின் எல்லா செயற்பாடுகளையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல் அனைத்துச் செயற்பாடுகளையும் நான் எதிர்க்க முடியாது. இருப்பினும் நல்லதெனக் கருதும் விடயங்களை நான் செய்தே வருகிறேன்.

### மலையகத்தில் குண்டு வெடிப்புகள்

கே:- தற்போது தோட்டப்பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் குண்டுகளை வெடிக்க வைக்கிறார்களே?

ப:- ஆம். அப்படித் தான் சிலர் கூறுகிறார்கள்.

கே:- ஒரு தலைவன் என்ற ரீதியில் அவற்றை உங்களால் தடைசெய்ய முடியவில்லை என்பதையே இந்தச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன. இல்லையா

ப:- தென்பகுதியில் இளைஞர்கள் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். வட பகுதி தமிழ் இளைஞர்களும் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். ஆனால் தோட்டப்பகுதி இளைஞர்கள் அவ்வாறு கிளர்ந்தெழவில்லை. நான் 50 ஆண்டுகளாக அவர்களைப் பாதுகாத்து வந்துள்ளேன். இருப்பினும் இன்று சிலர் அவர்களுக்கும் பெயர் சூட்ட முற்படுகிறார்கள் போல் தெரிகிறது.

கே: தோட்டப்பகுதிகளில் இருந்து இதற்கு (யுத்தத்திற்கு) ஒத்துழைப்பு கிடைக்கவில்லை எனக் கூறுகிறீர்களா?

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தவக்கால சிந்தனை

[9ஆம் நாள்]

தேவைகள் ஏற்படும்போது புதியவை தோன்ற வழிகள் பிறக்கின்றன. தேடும்போது வாய்ப்புகள் உருவாகின்றன. முயற்சிகள் கூர்மையாகும்போது வெற்றிகள் பலனாகக்கிடைக்கின்றன.

இவையெல்லாம் உலகத்தினர் நிலைப்பாடு ஆகும். இறைஆட்சியிலும் கேட்போருக்கும், தேடுவோருக்கும், தட்டுவோருக்கும் தான் பலன்கிடைக்கின்றது. ''உள்ளத்தைத் தட்டிக் கேளுங்கள் தேடுங்கள்'' இறை ஆவியை இறைவன் கொடுப்பார். அவரின் ஆற்றலால் தேவையானதைப் பெற்றுக்கொள்ளலாம். '' விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாகக் கொடுப்பார்.''

(மத்:7:11)

இறைவார்த்தையைக் கேட்போம்; இறைவனைத் தேடுவோம். உங்களைத் தட்டுவோம். உறவுகளைக் கட்டுவோம். பிதா எமக்குச் செய்யவேண்டுமென்று எதிர்பார்ப்பதை முதலில் நாம் மற்றவர்களுக்குச் செய்து இறை அரசின் சாட்சிகளாவோம்

-அபிர்-

## நாளை

மாசி 22

வெள்ளிக்கிழமை

திதி: அட்டமி

காலை 7.19 வரை

நவமி

வைகறை 6-17 வரை

சுபநேரம்: 6.26 - 7.56

ராகு காலம்: 10.56 - 12.26

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

ஒரு மனிதனின் ஆசையானது எப்போதும்குறைவது இல்லை அது மனதின் பசியாகும். எப்போதும் தீராதது. இதற்கு விதிவிலக்காக இருப்பவர்கள் மகான்கள் மட்டுமே.

- காண்டேகர்

## சாயி சிந்தனை

பிள்ளைகள்தறிகெட்டுத் தீய வழிகளில் போனால் அந்தப் பழி முக்கியமாகப் பெற்றோரையே சாரும். இன்று பெற்றோர் பிள்ளைகளுக்கு அதிகமாகச் செல்லம் கொடுக்கின்றார்கள். பாசம் மாத்திரம் இருந்துவிட்டால் போதாது; பிள்ளைகள் மேல் கட்டுப்பாடும் இருக்க வேண்டும்.

அன்பும் வேண்டும், சட்டதிட்டமும் வேண்டும். அன்பும் கண்டிப்பும் இருந்தால் மட்டுமே அந்த அன்பினால் நன்மை ஏற்படும். குழந்தைகள் இயற்கையாகவே கள்ளமற்றவர்கள்; ஏதும் அறியாதவர்கள் அவர்களிடமுள்ள தீய பழக்கங்களுக்கெல்லாம் பெற்றோரே முக்கிய பொறுப்பாளிகளாவர்.

பிள்ளைகளுக்குத் தகுந்த பழக்கங்களைப்பழக்குவதற்குப் பெற்றோர் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. அவர்களுக்குப் பணத்தை அள்ளிக் கொடுத்து அதிக சலுகை காட்டுகிறார்கள். தங்கள் பிள்ளை உயர் பதவியை அடைந்து, பெருமளவு சம்பாதித்து, செல்வம் சேமித்து, வசதியாகவும், சொகுசாகவும் வாழ வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆனால் நற்குண நடத்தைகளின் அவசியத்தைப் பிள்ளைகளுக்கு உணர்த்துவது எப்படி என்பது பற்றி ஒருகணமாவது எண்ணிப் பார்ப்பதில்லை. நீதி நெறிகளும், நல்ல நோக்குகளும் குழந்தைகளிடம் தழைத்து வளரும்படி பழக்கி வைப்பது பெற்றோரின் கடமையாகும். வாழ்விலே முன்னேறும்படி வெறுமனே ஊக்குவிப்பது தகுந்த செயலல்ல.

தங்கள் புதல்வர்கள் பழிபாவத்துக்கு ஆளாகாமல், ஒழுங்காக வாழ்ந்து, நற்பெயர் ஈட்டுவதைக் கண்டுதான் பெற்றோர் மகிழ்ச்சி அடைய வேண்டும். மகன் பிறந்து விட்டால் அதையிட்டு உடனே மகிழ்ச்சி கொண்டாடுவது மடைமையாகும்.

ஆதாரம்:
Sanathana Sarathi (English)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாளை சத்தியப்பிரமாணம்

புதிதாக நியமிக்கப்பட்ட 8 ஜனாதிபதி சட்டத்தரணிகளும் நாளை சத்தியப் பிரமாணமெடுக்கவுள்ளனர்.

சட்டத்தரணிகளான டி. எஸ். டி. பி. ஆர். சேனநாயக, ஏ. ஏ. டி. சில்வா, ஜே. ஈ. பி. தெரணியகல, எஸ். எஸ். சஹாபந்து, கலாநிதி நீலன் திருச்செல்வம், ஜி. விஜயவிக்கிரம, எம், இக்ரம் மொஹமட், எப். எச். பி. செயின்ட் அல்விஸ் சில்வா ஆகியோரே இந்தச் சட்டத்தரணிகளாவர்.

(ஐ–10)

# நாட்டில் சமாதானம் வேண்....

(ஏழாம் பக்கத் தொடர்)

ப: ஆம்.

கே: எனவே இந்தச் சம்பவங்கள் விடுதலைப் புலிகளால்தான் மேற்கொள்ளப் படுகின்றனவா?

ப: காலியில் குண்டுகள் வெடித்தன, கொழும்பில் குண்டுகள் வெடித்தன. அவற்றை யார் மேற்கொண்டனர். அச்சம்பவங்கள் பற்றி சிங்கள மக்கள் என்ன கூறுகிறார்கள்.

கே: நீங்கள் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை மூடி மறைக்கிறீர்கள் எனச் சிலர் குற்றஞ் சாட்டுகிறார்களே?

ப: அது என்னுடைய வேலை. அது யாருடனும் சம்பந்தப்பட்டதல்ல.

கே: அரசாங்கம் தீர்வுத் திட்டத்தை அமுல் படுத்துகிறது. ஆனால் விடுதலைப் புலிகளின் உடன்பாடு கிடைக்கவில்லை. அவ்வாறான நிலையில் தீர்வுத் திட்டத்தை அமுல் செய்வதால் பலனேதும் கிடைக்குமா?

ப: நாங்கள் விடுதலைப் புலிகளை ஒரு பக்கத்திற்குத் தள்ளுவோம்.

கே; விடுதலைப் புலிகள் இந்த விடயத்தில் முக்கிய பங்காளிகளாக இருக்கும் போது அவர்களை எவ்வாறு ஒரு பக்கத்திற்குத் தள்ள முடியும்?

ப:- இவ்விடத்தில் நாங்கள் சாதாரண பொதுமக்களின் நோக்கங்களை மட்டுமே கருத்திற் கொள்ள வேண்டும்.

கே:– தீர்வுப் பொதியை அமுல்படுத்துவதானது ஈழத்தை வழங்குவதற்கு ஒப்பானது என சிலர் தெரிவிக்கிறார்களே.

ப:– விடுதலைப்புலிகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது. தமிழ் மக்கள் தங்களது பணிகளை மேற்கொண்டு வரும் வேளையில் சிங்கள மக்களும் தங்களது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கே:– தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் விடுதலைப்புலிகள் அமைதியடைந்து விடுவார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?

ப:– இந்கப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டால் விடுதலைப் புலிகள் அமைப்பு என்ற ஒன்று இருக்காது.

கே:– விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்கும்வரை இந்தப் பிரச்சினைக்கு முடிவு வராது எனப் பலர் கருதுகிறார்களே.

ப:- விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என சில மிதவாதிகளும் சில அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியுள்ளனர்.

கே:– வடபகுதியின் நிர்வாகத்தை 5 ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என நீங்கள் முன்பு கூறியது ஞாபகத்திலுள்ளதா?.

ப;– ஆம். எனக்கு நல்ல ஞாபகத்தில் உள்ளது.

கே:– நீங்கள் அந்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறீர்களா?

ப:– அன்று அப்படிச் செய்திருந்தால் இன்று நாட்டில் அமைதி உருவாகியிருக்கும்

### சமாதானமே தேவை

கே:- நீங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குச் சார்பாகவே வாதிடுகிறீர்கள் என நான் நினைக்கிறேன்.

ப:– எனக்குத் தேவை சமாதானமே.

கே:– 1991 இல் நீங்களும் வடக்கு — கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தீர்கள், இல்லையா?

ப:– ஆம்.

கே:- அதற்கு என்ன நடந்தது?

ப:– நாட்டின் துரதிர்ஷ்டமோ மக்களின் துரதிர்ஷ்டமோ என்னவோ அந்தத் திட்டம் கவனத்தில் எடுக்கப் படவில்லை.

கே:- இந்த அரசின் ஆட்சியிலும் உங்கள் திட்டம் கவனத்தில் எடுக்கப்படவில்லையா?

ப:– பண்டாரநாயகாவின் ஆலோசனைகளைக் கேட்காதவர்கள் எனது ஆலோசனைகளையா கேட்கப் போகிறார்கள்!

கே:– நீங்கள் ஒரு அமைச்சராக இருக்கின்றபோதிலும் உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆட்கள் அரசாங்கத்தில் இல்லை என்பதே இதிலிருந்து தெரிகிறது; இல்லையா?

ப:- ஒரு நாட்டில் தலைவர் கூறும் கருத்தை நிராகரித்த ஒரு நாட்டில் என் போன்றவர்களின் கருத்திற்கு என்ன மதிப்பு?

★

---

யா\ யாழ்ப்பாணம்

மத்திய கல்லூரி

(தேசிய பாடசாலை)

ஆரம்ப பிரிவு

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்:– 05 – 03 – 1998 வியாழக்கிழமை
பிற்பகல் 2-00 மணி (புதிய நேரம்)

இடம்:– கல்லூரி விளையாட்டு மைதானம்

பிரதம விருந்தினர் :- திரு. கே. கணேசநாதன்
(விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்,
யா/ பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்:- திரு. ப. சிவபாலன்
(நிதி உதவியாளரும்,
களஞ்சியப்பொறுப்பாளரும் யாழ்.
கல்வித்திணைக்களம்)

சிறப்பு விருந்தினர்கள்:- திருமதி வ. குலசிங்கம்
(முன்னாள் ஆசிரியர்,
யாழ். மத்திய கல்லூரி)

திருமதி எஸ். எஸ். கருணைராசா
(முன்னாள் ஆசிரியர், யாழ்.
மத்திய கல்லூரி)

செல்வி ஏ. விக்ரோறியா
(முன்னாள் ஆசிரியர், யாழ். ம. க.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா. அ. சங்கத்தினர்.

(சி-3035)

---

## வாண்மை விருத்திச் செயலமர்வு

(அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும்)

காலம்: 08–03–98 ஞாயிற்றுக்கிழமை
காலை 10–30மணி (பு. நே.)

இடம்: யா/வேம்படி மகளிர் கல்லூரி

தலைமை: திரு. சி- தார்சீசியஸ்
(தலைவர், இ. த. ஆ. சங்கம்,
யாழ். மாவட்டம்)

தொடக்கவுரைகள்:

1. திரு. இ. அருளானந்தம்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
2. திருமதி க. பொன்னம்பலம்
(அதிபர், யா/வேம்படி மகளிர் கல்லூரி)

விரிவுரைகள்:

1. ''கற்பித்தலினூடாக உளநல மேம்பாடுகளை வளர்த்தல்''
கலாநிதி சபா. ஜெயராசா
(முதுநிலை விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)
2. ''ஆசிரியர்-பாடசாலை- காரியாலயம்''
திரு. செ. மெற்றாஸ் மயில்
(நிர்வாக அதிகாரி, யாழ் / நல்லூர்/
தீவகக்கோட்டங்கள்)
3. ''ஆசிரியர்களும், காரியாலயத் தொடர்புகளும்''
திரு. இ. தவராசா
(செயலாளர், யாழ். மாவட்டம்,
அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்)
4. ''உரிமைகளும் கடமைகளும்''
திரு. த. பஞ்சலிங்கம்
(சி. து. பொதுச்செயலாளர், இ. த. ஆ. சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொழிற் சங்க சேவையில்
த. பஞ்சலிங்கம்,
சி. து. பொதுச்செயலாளர்,
இ. த. ஆ. சங்கம்.

442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி-3032)

---

உ
சிவமயம்

## 31ஆம் நாள்

# நினைவஞ்சலியும்

## மரண அறிவித்தலும்

## நன்றி நவிலலும்

# அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

## மாணிக்கம் நாகமுத்து

(மயிலு)

தோற்றம்: 12 – 03 – 1927

மறைவு: 04 – 02 – 1998

எமது அன்பின் இருப்பிடமாக விளங்கிய நாயாராகிய அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் பல வகைகளில் உதவிய அன்பர்களுக்கும் நன்றி கூறுவதோடு 6-3-98 வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்க உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூரைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமுத்து மாணிக்கம் இறைபதம் அடைந்துள்ளார்.

இவர் பிரபல வர்த்தகர் நாகமுத்துவின் அன்பு மனைவியும், முத்தாச்சி, இராசசிங்கம், நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னப்பிள்ளை, கந்தையாவின் மைத்துனியும், இராசமலர், தேவமலர், புஸ்பமலர், காலஞ்சென்ற நவரத்தினம், தவமலர், சரஸ்வதி, குலசிங்கம் (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்), முத்துராசா (தேசிய வீடமைப்பு அதிகாரசபை, வவுனியா), குணரத்தினம் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் கே.கே.எஸ்.), கமலேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமன், அற்புதலிங்கம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), செல்வரத்தினம் )ஓய்வு பெற்ற ஊழியர் இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்.), பாலேந்திரா (நில அளவையாளர், அனுராதபுரம்), காலஞ்சென்ற சதாசிவம் (இலங்கைக் கடற்படை, திருகோணமலை), ரதீஸ்வரி, ரேணுகா (வவுனியா). வசந்தகுமாரி, பிறேமதாஸ் (C. T. B. வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஞானசக்தி, காலஞ்சென்ற ஞானசுந்தரவேல், நவஜீவன் (பனம்பொருள் அபிவிருத்திச்சபை, யாழ்.), நிஜலிங்கம், கேதாரணி, பவானி, பாதநேசன், மஞ்சுளா, அரசரத்தினம் (ஜேர்மனி), இறைபதமெய்திய சுதர்சன் (சுஜி), ஷமிலா, சபேசன் (தொழில் நுட்பக் கல்லூரி, யாழ். மாணவன்), நிதர்ஷன், பத்மசீலன், தர்சினி, தர்சிகா, யாழினி, சஞ்சீவன், சுகர்ணன், லக்சிகா, செந்தூரன் பிரணவன், கோகுலன், கபில்ராஜ், காலஞ்சென்ற பவுத்திரா, மயூரிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

நன்றி.

நா. குலசிங்கமும்
குடும்பத்தினரும்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

(53830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் கைதான மேலும் 18 பேர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் புடையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பெப்ரவரி முதலாம் திகதிவரை காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 18 பேரின் பெயர் விவரங்களை பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். அவர்களின் பெயர்விவரங்கள் வருமாறு:-

★ மகாதேவன் புவனேந்திரராஜா (கலையரசி வீதி, யாழ்ப்பாணம்) அரியாலையில் கைது.

★ தர்மலிங்கம் சிறீஸ்கந்தராஜா (கரவெட்டி) மாலுசந்தியில் கைது.

★ தம்பு பாலச்சந்திரன் (கரவெட்டி) நெல்லியடியில் கைது.

★ பொன்னையா பாஸ்கரன் (வல்வெட்டித்துறை) நெல்லியடியில் கைது.

★ ஐயாப்பிள்ளை யோகராஜா (கரணவாய்) நெல்லியடியில் கைது.

★ கிருஷ்ணபிள்ளை மோகனதாஸ் (கரணவாய்) நெல்லியடியில் கைது,

★ ராசரத்தினம் சிறிதரன் (மாசேரி, வரணி) வரணியில் கைது.

★ கணேசன் நவநீதன் (மாசேரி, வரணி) வரணியில் கைது.

★ சிவலிங்கம் உதயரூபன் (மீசாலை) மீசாலையில் கைது.

★ வேலுப்பிள்ளை பாஸ்கரன் (வெல்லம்பிட்டி, கொடிகாமம்) வெல்லம்பிட்டியில் கைது.

★ நாகேந்திரன் ஜெயதாஸ் (மீசாலை) மீசாலையில் கைது.

★ கந்தையா நவரத்தினம் (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) நாகர்கோயிலில் கைது.

★ நல்லையா பிரதீபன் (மட்டுவில்) நுணாவிலில் கைது.

★ வெள்ளயன் ரட்ணசிங்கம் (ஆவரங்கால்) ஆவரங்காலில் கைது.

★ சின்னத்துரை ஞானசேகரன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணத்தில் கைது.

★ பாலசிங்கம் சியாமினி (வண்ணார்பண்ணை) யாழ்ப்பாணத்தில் கைது.

★ பாலசிங்கம் கல்பன (வண்ணார்பண்ணை) யாழ்ப்பாணத்தில் கைது.

★ செல்வராஜா பத்மராஜா (வண்ணார்பண்ணை) யாழ்ப்பாணத்தில் கைது.

(இ-9)

## சமய நிகழ்வுகளில்

சாவகச்சேரி, மார்ச் 5

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீதுர்க்கா தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை விழா கடந்த திங்களன்று ஆரம்பமானது. தொடர்ந்து இலட்சார்ச்சனை 10 தினங்கள் நடைபெற்று மாசி மகத்தன்று சங்காபிஷேகத்துடன் சுவாமி வீதிஉலா இடம்பெற்று விழா நிறைவுறும். (ஐ-31)

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்களன்று ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று 10 ஆம் நாளான எதிர்வரும் புதன்கிழமை மாசிமகத்தன்று விசேட சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதி உலாவுடன் உற்சவம் நிறைவுபெறும்.

(ஐ-31)

★ ★ ★

வடமராட்சி மார்ச் 5

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை தேவார இசைமணி தாவடியூர் எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் இசைக்கச்சேரி நடைபெறும்.

(இ-173)

## தெல்லிப்பழை மாசி மக இலட்சார்ச்சனை

மல்லாகம், மார்ச் 5

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக ஆரம்பமாகியது.

இலட்சார்ச்சனை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும். அடுத்த நாள் புதன்கிழமை மாசி மகப் பெருவிழா நடைபெறும். அன்றைய தினம் கலசாபிஷேகம் இடம்பெறும்.

ஆலய தீர்த்தக்கேணியான துர்க்கா புஷ்கரணியில் அன்று காலை 6-30 மணிக்கு மாசி மகத் தீர்த்தம் நடைபெறும். அடியார்களும் புனித நீராட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போது நாளாந்தம் நடைபெறும் இலட்சார்ச்சனையில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் பங்குபற்றி வருகின்றனர்.

(அ-86)

## ரூபவாஹினி பணிப்பாளர்

கொழும்பு, மார்ச் 5

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக எரிக் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்களன்று தனது புதிய பதவியைப் பொறுப்பேற்ற எரிக் பெர்னாண்டோ முன்னர் ரூபவாஹினியின் ஆங்கில சேவையில் அறிவிப்பாளராகக் கடமையாற்றினார். (ஐ-10)

## கடற்றொழிலாளர் குடும்ப விவரம்

யாழ்ப்பாணம் மார்ச் 5

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபடுவோரின் குடும்ப விவரங்களைப் பதிவு செய்வதில் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் ஈடுபட்டு வருகிறது.

கடற்றொழில் பரிசோதகர்கள் மூலம் கடற்றொழிலாளர்களின் குடும்ப விவரங்கள், முகவரி, அண்மைக்கால அசம்பாவிதங்களால் ஏற்பட்ட உயிர், பொருள் இழப்பு, கடற்றொழில் உபகரணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய குடும்ப அட்டைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

கடற்றொழிலாளர்கள் யாவரும் இக் குடும்பப் பதிவு அட்டையில் உண்மையான தகவல்களைப் பதிவு செய்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் சர்வதேச நிறுவனங்கள் மூலம் வழங்கப்படவிருக்கும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென கடற்றொழில் விரிவாக்க அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-7)

## சித்திரைப் புத்தாண்டை ஒட்டி விளையாட்டு நிகழ்வுகள்

எதிர்வரும் சித்திரைப் புதுவருடத்தை ஒட்டி யாழ். மாவட்டத்தில் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்த யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

உதைபந்தாட்டம், கிரிக்கெட், மெய்வன்மை, கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பாக கழக அணிகளுக்கு இடையில் சுற்றுப் போட்டிகளை சம்பந்தப்பட்ட விளையாட்டுக்குப் பொறுப்பான மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் நடத்தும் என்றும் —

அதற்கான ஏற்பாடுகளுக்கு இணைப்பு அமைப்பாகயாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சம்மேளனம் செயற்படும் என்றும் —

சம்மேளனத்தின் தலைவர் க. தர்மகுலசிங்கமும், செயலாளர் கிளிபேர்ட் அன்ரனிப்பிள்ளையும் தெரிவித்தனர்.

இந்த ஏற்பாடுகள்தொடர்பாக ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட சங்கங்களை மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சம்மேளனத்துடன் உடன் தொடர்பு கொள்ளும்படியும் அவர்கள் கோரியுள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி சைக்கிளோட்டம், வீதியோட்டம் மற்றும் சுதேசிய விளையாட்டுக்களும் நடத்தப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மெய்வல்லுநர் போட்டிகள்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

யாழ், கல்வி வலயம் - 2 பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி. இராசையா பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்பு விருந்தினராகவும் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றனர், (ஐ-152)

★ ★ ★

இமையாணன் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)

★ ★ ★

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் க. பொன்னையா தலைமையில் நடைபெறும்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)

★ ★ ★

வட்டுக்கோட்டை, மார்ச் 5

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் ஒரு மணி தொடக்கம் வித்தியாலய விளையாட்டு அரங்கில் அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக சங்கானை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் கே. கணேசலிங்கமும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (ஐ-12)

## தெற்கு ஆசிய கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு தெற்கு ஆசியக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

புவியியல்துறை மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

கருத்தரங்கின் முற்பகல் அமர்வுக்கு கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார்.

பிற்பகல் அமர்வுக்குத் தலைமைவகிக்கவுள்ள பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் ''சுகாதார நிலையும் தெற்கு ஆசியாவில் உள்ள நோய்களும்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.


# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத்திணைக்களம், யாழ்ப்பாணம்.

மேற்படி திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள் யாழ்ப்பாண, நிர்மாணத்துறை, பிரதம பொறியியலாள அலுவலக கேள்விச் சபைத் தலைவரினால் 1998 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 10. 30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் இக்காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டிடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம். 9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரத்தினை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1998 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் |
|---|---|---|
| தொலைத் தொடர்பு அலுவலக பாதுகாப்பு அறை — பண்ணை | 9,000/- | 500/- |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி
பிரதம பொறியியலாளர் [நிர்மாணம்]
யாழ்ப்பாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
04-03-1998.

[சி/3040]



நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்

இன்று முதல்
நெப்போலியன் - சங்கவி
நடித்த
**பகவத்சிங்**

காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)

(சி/2756)



லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
35 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
விக்னேஸ் - தேவயானி
நடித்த
**காதலி**
நாளை முதல்
M. G. R. நடித்த
**இதயக்கனி**
(புதிய பிரதி)
பழைய நேரம்
10-30, 2-30

(53059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானியச் செய்கை வரட்சியால் பாதிப்பு

வட்டுக்கோட்டை, மார்ச் 5

வட்டுக்கோட்டை, அராலிப்பகுதிகளில் மழை இன்மையால் சிறுதானியச் செய்கையானது பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி விவசாயிகள் நெல் அறுவடை முடிந்த வயல்களை உடனடியாக உழவு செய்து எள்ளு, பயறு, சணல் போன்ற சிறுதானியப் பயிர்களைப் பயிரிட்டு வந்தனர். இவ்வருடம் காலபோக மழை குறைந்ததால் வயல்கள் யாவும் காய்ந்து நெல்விளைவிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அநேகமான வயல்கள் உழவு செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன. (ஐ-12)

# அலவி மௌலானா யாழ். வருகின்றார்

கொழும்பு, மார்ச் 5

யாழ். உள்ளூராட்சிச் சபைகள் இயங்குவதில் உள்ள சிக்கல்கள் குறித்து நேரில் ஆராய உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் அலவி மௌலானா அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபைக்கு மேஜர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி சறோஜினி யோகேஸ்வரன் உட்பட ஏனைய உள்ளூராட்சித் தலைவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கிறார்.

உள்ளூராட்சிச் சபைகளை இயக்குவதில் உள்ள தடைகள், நிதி மற்றும் கட்டட வசதிகள், அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன தொடர்பாக அவர் ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# ஐ. தே. கவின் யோசனை நேற்று வெளியாகவில்லை

கொழும்பு, மார்ச் 5

அரசு முன் வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பான 2 ஆம் கட்ட மாற்று யோசனைகளை இன்று அல்லது நாளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் ஐ.தே.க. சமர்ப்பிக்க விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாற்று யோசனைகள் அடங்கிய ஆவணங்களை ஐ. தே. க. தயாரித்து விட்டதாகவும் —

திட்டமிட்டபடி நேற்று அவை சமர்ப்பிக்க முடியாது போய்விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# லங்கா முடித கப்பலில் 3000 பேர் யாழ். வருவர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

தற்சமயம் காங்கேசன்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ''லங்கா முடித'' கப்பல் மூலம் திருகோணமலையில் இருந்து 3 ஆயிரம் பேரை யாழ்ப்பாணம் அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி முடித்ததும், பெரும்பாலும் அடுத்த வார இறுதியில் இக்கப்பல் காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் இரு தடவைகள் பயணிகள் சேவையை நடத்தவிருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் யாழ்ப்பாணம் வருவதற்காகக் காத்திருக்கும் பயணிகளில் 3 ஆயிரம் பேரைத் திருகோணமலையில் வைத்து ஏற்றிவர ஏற்பாடாகியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# விமானப்படைத் தளபதி ஓய்வு திடீரென எடுக்கப்பட்ட முடிவு

கொழும்பு, மார்ச் 5

விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க ஓய்வு பெறுகின்றார் என்ற அரசின் செய்தி எதிர்பாராத திடீர் தீர்மானத்தின் பேரில் எடுக்கப்பட்டுள்ளது.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் மேற்கண்டவாறு பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

விமானப்படைத் தளபதி இன்று ஓய்வு பெறுவது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விமானப்படைத் தளபதியின் பதவிக்காலம் பெப்ரவரி 17 ஆம் திகதி முடிவடைந்தது. அதன் பின் அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அதன் பின் அவர் சிங்கப்பூர் சென்று அங்கு விமானப் படைக் கண்காட்சி ஒன்றில் பங்குபற்றினார். பின்னர் அவர் பாங்கொக் போய் கடந்த திங்கட்கிழமை நாடு திரும்பினார். இன்று அவர் இரத்மலானையில் விமானப் படையினரின் நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றினார். மறுநாள் அவருக்கு ஓய்வு பெறுவதற்கு அனுமதி அளிக்கும் அரசின் அறிவிப்பு வெளியானது. இது எதிர்பாராத அறிவிப்பு ஆகும் — என்றார்.

# சமுர்த்தி உதவியாளருக்கு கடமை ஒதுக்கவில்லை

உரும்பிராய், மார்ச். 5

கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் 15 சமுர்த்தி உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இங்கு சமுர்த்தித்திட்ட நடவடிக்கைகள் எதுவும் இதுவரையில் ஆரம்பிக்கப்படாததனால் இவர்களுக்குக் கடமைகள் எதுவும் வழங்கப்படவில்லை என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தினமும் பிரதேசச் செயலகத்திற்கு வந்து கையொப்பமிட்டுத் தங்கியிருந்து விட்டு இவர்கள் திரும்பிச் செல்கின்றனர். (ஐ-154)

# வலிகாமம் வடக்கில் மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 5

சர்வதேசமகளிர் தினத்தையொட்டி வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

அத்தினங்களில் அப்பிரதேசக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சார்ந்த பெண்களிடையே சுயதொழில் ஊக்குவிப்புப் போட்டிகளும், கலை பண்பாட்டுப் போட்டிகளும் இடம்பெற இருப்பதுடன், வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன.

இத்தினத்தில் வலி.வடக்கு பிரதேசத்தில் அருவி வெட்டுதல் போன்ற ஒரே தொழிலைச் செய்யும் ஆண்கள், பெண்கள் இடையே உள்ள சம்பள ஏற்றத் தாழ்வை நீக்கி சமநிலைப்படுத்துவதென்றும் தீர்மானம் ஒன்று பிரகடனப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கண்காட்சி ஆய்வரங்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 5

சர்வதேசமகளிர்தினத்தையொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் கண்காட்சி, ஆய்வரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார் என்று மகளிர் அபிவிருத்தி நிலையம் அறிவித்துள்ளது. (இ-3)

# ஐ.நா. பிரதிநிதி யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் மேயர் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். செயலகத்துக்கு விஜயம் செய்த அவர் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் உட்பட செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடி யாழ்ப்பாணத்தில் தமது அமைப்பு மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்தும் இவ்வாண்டுக்கான திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்தார்.

இன்று அவர் நெடுந்தீவுக்குச் செல்கிறார். (இ-3)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து குழிபறித்த குளத்துக்கு செல்லும் வீதியிலேயே இச்சடலங்களை கிராம வாசிகள் செவ்வாய்கிழமை பகல் கண்டு தகவல் தெரிவித்தனர்.

உடனடியாக அந்த இடத்துக்கு விஜயம் செய்த பொலீஸார் எரிந்த சடலங்களின் எஞ்சியவற்றை எடுத்து வந்து வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

நான்கு டயர்களைப் போட்டு 2 சடலங்களையும் எரித்ததற்கான அடையாளங்கள் காணப்படுவதாகச் சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மிகவும் மர்மமான முறையில் நிகழ்ந்த இந்தச் சடலங்கள் எரிப்புச் சம்பவம் இப்பகுதி மக்களிடையே இனந்தெரியாத அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. (இ-8-21-3)

## கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தல் நடத்துவதற்காக இது விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

வாகன தொடர் அணி புறப்பட் முன்பு வீதி கண்காணிப்பின் போது இது கண்டுபிடிக்கப்பட்டதாக இராணுவத் தரப்பு தெரிவித்தது. (இ-21)

## இலங்கை மீனவர்..

(முதலாம் பக்கத் தொடர்)

துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கை மீனவர்கள் வந்த மூன்று படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்தனர். (இ-3)

## மாங்குளத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளன.

ஆதலால் அந்த நகரை ஒரேயடியாகக் கைப்பற்றாமல் படிப்படியாகவே கைப்பற்ற இருக்கின்றோம் என்று அந்த அதிகாரிமேலும் தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது. (இ-10-3)

## மதிப்பீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைவர் ஒபடேயால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அவர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.

மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் முதல் கட்டமாக சிமெந்து அரைத்தல் மற்றும் பொதி செய்தல் பணிகளுக்கு 11 கோடி 85 லட்சம் ரூபா தேவை. அங்கு 4 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான கிளிங்கர் உள்ளது. இந்த முதல் கட்டம் பூர்த்தியானதும் தினமும் 10 ஆயிரம் சிமெந்து பைகள் உற்பத்தி செய்ய முடியும்.

★ லங்கா சிமெந்து நிறுவன ஆலையைப் புனரமைத்து சிமெந்து அரைத்தல் மற்றும் பொதி செய்யும் முதல் கட்டப் பணிகளுக்கு 25 கோடி 50 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்பணி பூர்த்தியான பின்னர் தினமும் 26 ஆயிரம் பொதி சிமெந்து உற்பத்தி செய்ய முடியும்.

★ மார்ச் மாத இறுதியில் இத்தொழிற்சாலைகளுக்கான மின்சார விநியோகம் வழங்கப்படும். (இ-3)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்திருந்தனர்.

யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கத்திடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட இரு ராஜினாமாச் கடிதங்களும் உடனடியாக தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டன.

புதியவர்களை நியமிக்க வசதியாகவே இவர்கள் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய மேயர் பதவியேற்பு எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அது உறுதிசெய்யப்படவில்லை என்று மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## உதிரிக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

21 இடங்களையும் பெற்றுள்ளன. இன்னும் 6 முடிவுகளே வெளிவரவேண்டியுள்ளது.

பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு வழங்க தெலுங்கு தேசம் முன்வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய முன்னணியின் முக்கிய கட்சியாக விளங்கும் தெலுங்கு தேசம் கட்சி ஆந்திராவில் தனது ஆட்சியைப் பாதுகாக்க பாரதீய ஜனதாவின் ஆட்சிக்கு ஆதரவு அளிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்க தெலுங்கு தேசம் கட்சி நாடாளுமன்றக் குழு நேற்றிரவு கூட இருந்தது.

ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மற்றும் சில கட்சிகளும் காங்கிரஸுக்கு ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்கக் கூடாது என்று கருத்து வெளியிட்டுள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சி ஐக்கிய முன்னணியின் ஆதரவு கட்சிகளுடனும், உதிரிக் கட்சிகளுடனும் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றது.

காங்கிரஸ் கட்சி மதசார்பின்மை அரசு அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஆதரவைக் கோரி வருகிறது.

நிலையான ஆட்சி ஒன்று அமைய வேண்டுமானால் பாரதீய ஜனதாவால் தான் முடியும் என்று பாரதீய ஜனதாத் தலைவர்கள் கூறிவருகின்றனர். (இ-8-3)

## ஈ. பி. டி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுவிக்கப்பட்ட மூவரும் தத்தமது உறவினர்களிடம் செல்ல விருப்பம் தெரிவித்ததையடுத்து, அவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 - 03 - 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org